# திருக்கோவையாரில் வெளிப்படுத்தப்படும் தெய்விகக் காதல்: ஓர் ஆய்வு

**இராமக்கவுண்டர் பேபிசாலினி[1]**


## ஆய்வுச்சுருக்கம்

*திருக்கோவையார் எனும் நூலானது மாணிக்கவாசக சுவாமிகளால் அருளப்பட்ட தலைசிறந்த ஒரு பக்தி நூலாகக் காணப்படுகின்றது. உலகியல் வாழ்வுடன் தொடர்புடைய காதல் பற்றிக் கூறுகின்ற ஒரு அகத்திணை நூலாகவும் இது திகழ்கின்றது. மனிதனது வாழ்வியலுடன் காதல் எனும் உணர்வானது அன்றும் இன்றும் பின்னிப் பிணைந்த வண்ணமே விளங்குகின்றது. வாழ்வியலினை இயக்கும் ஆற்றல் சமுதாயத்திடம்தான் உள்ளது. தனிமனிதர்கள் சேர்ந்திருப்பது குடும்பமாகவும், குடும்பங்கள் பல சேர்ந்து வாழ்வது சமுதாயமாகவும் உருவாகின்றன. குடும்பமின்றி சமுதாய அமைப்போ, பண்பாட்டு வளர்ச்சியோ அமைவதில்லை. இயற்கை நெறியின் ஒரு பகுதியான உலகியற் காதல் இல்லையெனின் குடும்ப அமைப்பில்லை. ஆகவே பக்திப் பனுவல்களைப் பாடிய புலவர்கள் இயல்பாக எழும் காதல் உணர்ச்சிகளைக் கடவுள் மேல் வெளிப்படுத்தி இலக்கியங்களை உருவாக்கியமை குறிப்பிடத்தக்க சிறப்பாகும்.*

*பொதுவாக காதல் என்பது உயிரினங்களுக்கு இடையே ஏற்படும் பாலியல் ஈர்ப்பு, மனித நேயம், இரக்கம், அன்பு, அக்கறை உணர்வு மற்றும் சேர்ந்து வாழ்தல் ஆகியவற்றினைக் குறிக்கின்ற நல்லொழுக்கமாகும். அந்தவகையில் திருக்கோவையார் எனும் பக்தி நூலில் எங்ஙனம் அதிகளவில் தெய்வீகக் காதல் உணர்வுகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன என்பதே இவ்வாய்வின் பிரச்சினையாக அமைகின்றது. திருக்கோவையாரில் காணப்படுகின்ற தெய்வீகக் காதல் பற்றிய கருத்தியல்களை அடையாளம் காணல் மற்றும் மனித வாழ்வில் தெய்வீகக் காதலினை கடைபிடிப்பதனால் ஏற்படும் நன்மைகளை எடுத்துக்காட்டுதல் போன்றனவே இவ்வாய்வின் நோக்கங்களாகும்.*

*இதன் பொருட்டு இலக்கியப் பகுப்பாய்வு முறை இவ்வாய்வின் பிரதான ஆய்வு முறையாக பயன்படுத்தப்பட்டுள்ளது. இதற்காக திருக்கோவையாரின் உரைகள் அடங்கிய மூல நூல்கள் முதனிலைத் தரவுகளாகவும் திருக்கோவையார் மற்றும் தெய்வீகக்காதல் தொடர்பாக வெளிவந்த கட்டுரைகள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் போன்றன இரண்டாம் நிலைத்தரவுகளாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாய்வு முற்றுமுழுதாக பண்புசார் ஆய்வாகவே அமைந்துள்ளது. அந்தவகையில் மாணிக்கவாசகர் இறைவன்மீது கொண்டிருந்த தனது காதலினை திருக்கோவையார் எனும் இலக்கியத்தில் வெளிப்படுத்திய விதத்தினை ஆராய்வதுடன் தெய்வீகக் காதல் பற்றிய சிந்தனைகளின் ஊடாக மனிதநேயம், இறைவனின் அருட்திறம் மற்றும் வாழ்வின் நிலையான இன்பம் போன்றவற்றினை மானிடர்க்கு எடுத்துக்கூறுவதாக இவ்வாய்வானது அமைகின்றது.*


**திறவுச்சொற்கள் :** திருக்கோவையார், மாணிக்கவாசகர், தெய்வீகக்காதல், தலைவன், தலைவி

[1]இந்துநாகரிகப்பிரிவு, இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம்.
babysaliniramakkavundar@gmail.com

**ஆய்வு அறிமுகம்**

இறைவன் பெருமைகளையும் இறையனுபவங்களையும் கூறும் இலக்கியங்கள் அனைத்தும் பக்தி இலக்கியம் எனும் வகைக்குள் அடங்கும். தமிழில் பன்னிரு திருமுறைகளையும், நாலாயிரத் திவ்விய பிரபந்தங்களையும் மட்டுமே பக்தி இலக்கியம் எனக் கூறும் மரபு உண்டு. திருமுறை ஒரு தொகுப்பு இலக்கியமாக அமைகின்றது. பன்னிரு திருமுறைகளுள் எட்டாந் திருமுறையாக மாணிக்கவாசகரால் இயற்றப்பட்ட திருவாசகமும் திருக்கோவையாரும் வைக்கப்பட்டுள்ளன. மாணிக்க வாசகரின் பக்தி வெளிப்பாட்டினைத் திருவாசகத்திலும் இலக்கியத் திறனை திருக்கோவையாரிலும் காணலாம் (சுபராஜ், நா., 2015:251).

பிரபஞ்ச இயற்கையின் இரகசியங்களைக் கட்டவிழ்த்தபடி இயற்கையின் பல்வேறு நிகழ்ச்சிகளோடும், இயல்புகளோடும், கூறுகளோடும் வாசிப்பவர்களை அரவணைத்தபடி இயற்கை அதீதத்தின் உச்சத்தை நோக்கிய பயணத்தை எய்துவதாகவே திருவாசகம் கட்டமைக்கப்பட்டிருப்பது புலனாகின்றது (முகுந்தன், எஸ்., 2015:499). இதிலிருந்து முற்றும் வேறுபட்டதாக திருக்கோவையார் காணப்படுகின்றது. திருக்கோவையார் என்னும் நூலானது திருவாதவூரைச் சேர்ந்த மாணிக்கவாசகர் என்பவரினால் இயற்றப்பட்டது. பன்னிரண்டு சைவத் திருமுறைகளுள் இந்நூலானது, 400 பாடல்களினைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. இந்நூலினை ஆரணம் (வேதம்) என்பர். இது 25 அதிகாரங்களைக் கொண்டது. இந்நூல் பேரின்ப நூலாக விளங்குகின்றது. இதற்குத் திருச்சிற்றம்பலக் கோவையார் என்ற பெயரும் உண்டு. அதாவது, மாணிக்கவாசகர் திருவாய் மலரத் திருச்சிற்றம்பலமுடையானே தம் கைப்பட எழுதிக் கொண்ட சிறப்பினை உடையது. அதாவது இளம் வயதில் ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் காணுதல், உணர்ச்சி வசப்படுதல், உள்ளம் கலத்தல், காதலித்தல், திருமணம் செய்தல் போன்ற பல்வேறு நிகழ்ச்சிகள் கோர்க்கப்பட்டதால் கோவை எனப்படுகின்றது.

ஒவ்வொரு பாடலிலும் தில்லையையும் தில்லையில் உறைகின்ற சிவனையும் இணைப்பதனைக் காணமுடிகின்றது. இந்நூலில் இயற்கைப் புணர்ச்சி முதல் பரத்தையரின் பிரிவு பிரிவுவரையிலான இருபத்தைந்து கிளவிக் கொத்துக்கள் உள்ளன. தில்லைச் சிற்றம்பலவன் இந்நூலின் பாட்டுடைத் தலைவன். அவன் திருவடிகளைச் சிந்தையினில் கொண்டு விளங்குபவனே இந்நூலின் கிளவித்தலைவன். இக்கோவை நூலில் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு உறுதிப் பொருட்களும் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

திருக்கோவையாரில் ஆசிரியரது புலமையும் அவர் இறைவன் மீது கொண்டுள்ள தெய்வீகக் காதலும் தெளிவாக விளக்கப்படுகின்றது. உலக வாழ்வும், வாழ்வில் காணும் பெரும் போகமும் நிலையற்றவை, இறைவன் மீது கொண்ட அன்பே என்றும் நிலையானது என்ற சிந்தனையினையும் இந்நூல் புலப்படுத்துகின்றது. தெய்வீகக்காதல் தொடர்பான முன்னையோர்களது சிந்தனைகள் தற்கால சமூகத்திற்கு இன்றியமையாதவை. இன்றைய

மக்களிடையே இறைபக்தி மற்றும் அதன் முக்கியத்துவம் பற்றிய தெளிவின்மை காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. அந்தவகையில் தெய்வீகக் காதல் பற்றிய சிந்தனைகளின் ஊடாக மனிதநேயம், இறைவனின் அருட்திறம் மற்றும் வாழ்வின் நிலையான இன்பம் போன்றவற்றினை மானிடர்க்கு எடுத்துக்கூறுவதாக இவ்வாய்வானது அமைகின்றது.

திருக்கோவையார் எனும் அகப்பொருள் கோவையைப் படைத்து, இறைவன் மீது மாணிக்கவாசகர் கொண்டிருந்த தெய்வீகக் காதலினை மிகவும் தெளிவாகக் காட்டியுள்ளார். இவ்வாறு உலகியற் பொருட்களில் தனக்கு ஏற்படுகின்ற காதல் உணர்வுகளை விடுத்து அவர்களது மனதினால் எழுகின்ற காதல் எனும் உணர்வினை இறைவன்பால் செலுத்துவதன் மூலம் அவர்களது பக்திநிலை மென்மேலும் சிறப்புறுகின்றது. இவ்வாறு தமக்கு இறைவன் மீது ஏற்படுகின்ற தெய்வீகத்தன்மை வாய்ந்த காதலினை தமது இலக்கியங்கள் மூலம் உலகிற்கு எடுத்தியம்பி நல்லொழுக்கத்தினை மக்களிடையே உருவாக்குவதில் மாணிக்கவாசக சுவாமிகளின் பங்கு அளப்பரியது. அத்துடன் இந்நூலில் தலைவன், கிளைத்தலைவன், தலைவி, தோழி போன்ற பாத்திரப்படைப்புகளும் சிறப்பாக உள்வாங்கப்பட்டு, இவ்விலக்கியமானது படைக்கப்பட்டுள்ளது. பாட்டுடைத் தலைவனாக சிற்றம்பலத்தில் உறைகின்ற சிவன் போற்றப்பட்டுள்ளான். தலைவன் மீது அளவற்ற பக்தி கொண்டவராக கிளைத்தலைவன் விளங்குகின்றான். அதற்குச் சான்றாக ஒவ்வொரு பாடலிலும் சிற்றம்பலத்தானின் புகழினைப் பற்றி பேசப்பட்டுள்ளது.

தன்னைக் காதலனாகவும் இறைவனைக் காதலியாகவும் கொண்டு தனது காதல் உணர்வுகளையும் மன எண்ணத்தினையும் அழகாக எடுத்துரைக்கும் வகையில் ஆசிரியரால் இந்நூலானது படைக்கப்பட்டுள்ளது. காதலர்களது புணர்தல், காதலியின் ஏக்கம், தலைவியின் அழகு, தலைவியின் எதிர்பார்ப்பு, காதலனின் பிரிவுத்துயர், தோழியின் நம்பிக்கை, தலைவனது வீரம், நாட்டின் சிறப்பு போன்றனவற்றின் மூலமாக தெய்வீகக்காதல் உணர்வுகள் மிகையாக எடுத்தியம்பப்பட்டுள்ளமையை அறிந்துகொள்ள முடிகின்றது. ஆய்வின் முடிவாகக்கூறின் பக்தி இலக்கியமாக விளங்குகின்ற திருக்கோவையாரில் தெய்வீகக்காதல் பற்றிய சிந்தனைகளே அதிகமாகப் பேசப்பட்டுள்ளன போன்ற முடிவுகளை இவ்வாய்வின் மூலம் பெற முடிகின்றது.

### ஆய்வுப் பிரச்சினை

திருக்கோவையார் எனும் நூலானது பக்தி இலக்கியமாகக் காணப்படுகின்ற போதும் அந்நூலில் அதிகளவில் தெய்வீகக் காதல் உணர்வுகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன என்பதே இவ்வாய்வின் பிரச்சினையாக அமைகின்றது.

### ஆய்வின் நோக்கங்கள்

1. திருக்கோவையாரில் காணப்படுகின்ற தெய்வீகக் காதல் பற்றிய கருத்தியல்களை அடையாளம் காணல்.

2. மனித வாழ்வில் தெய்வீகக் காதலினை கடைப்பிடிப்பதனால் ஏற்படும் நன்மைகளை எடுத்துக்காட்டுதல்.

**ஆய்வின் கருதுகோள்**

திருக்கோவையார் எனும் பக்தி இலக்கியத்தில் அதிகளவில் தெய்வீகக் காதல் பற்றிய உணர்வுகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன என்பது இவ்வாய்வினுடைய கருதுகோளாகும்.

**ஆய்வின் எல்லை**

சைவத் திருமுறைகள் பன்னிரண்டினுள் திருக்கோவையார் இவ்வாய்வின் எல்லையாக கொள்ளப்படுகின்றது. இந்நூலில் வெளிப்படுத்தப்படும் தெய்வீகக் காதல் பற்றி இவ்வாய்வானது ஆராய்கின்றது.

**ஆய்வின் இடைவெளி**

திருக்கோவையார் பற்றிய மிகையான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் தெய்வீகக் காதல் பற்றிய உணர்வுகளினை வெளிப்படுத்துகின்ற சிந்தனைகள் தொடர்பான விரிவான ஆய்வுகள் எதுவும் எழவில்லை. இந்த ஆய்வு இடைவெளியை பூர்த்தி செய்யும் வகையில் இவ்வாய்வு இடம்பெற்றுள்ளது.

**ஆய்வு முறையியல்**

பகுப்பாய்வு முறைமை இவ்வாய்வின் பிரதான ஆய்வு முறையாக பயன்படுத்தப்பட்டுள்ளது.

**ஆய்வின் மூலங்கள்**

முதல்நிலைத் தரவுகளாக திருக்கோவையாரின் உரைகள் அடங்கிய மூல நூல் மற்றும் இரண்டாம் நிலைத்தரவுகளாக திருக்கோவையார் தொடர்பாக வெளிவந்த ஆய்வுக் கட்டுரைகள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் முதலியனவும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**கலந்துரையாடல்களும் பெறுபேறுகளும்**

ஓர் ஆண் அல்லது பெண்ணினுடைய மன உணர்வுகளினைப் பற்றியும், காதல் உணர்வுகளைப் பற்றியும், அவர்கள் காதல் செய்து பின்னர் திருமணம் புரிந்து வீடும் நாடும் போற்ற வாழும் நிலை பற்றியும் விளக்கிக் கூறும் பாடல்களினை அகப்பாடல்கள் என்று உரைக்கலாம். அந்தவகையில் தன்னிகரில்லாத் தலைவன் ஒருவனும் தலைவி ஒருத்தியும் காதல் கொண்டு இல்லறம் நடத்தும் அகத்திணைப் பொருளை ஆசிரியர் பாடலாக பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இத்தகைய அகத்துறைப் பாடல்களின் மூலம் காலம் காலமாக ஏற்றுக்கொள்ளப்படும் நெறிமுறைகளை எடுத்துக்கூறியும், சிலவற்றை தாம் கொண்ட நோக்கத்திற்காக சிறிது மாற்றியும், சில புது நெறிகளை உருவாக்கியும் மாணிக்கவாசகர் தம் படைப்பில் தெய்வீகக் காதலின் மகத்துவத்தினை வெளிப்படுத்தியுள்ளார். இனி திருக்கோவையாரில் மாணிக்கவாசகர் இறைவன் மீது கொண்டிருந்த தெய்வீகக் காதல் பற்றி நோக்குவோம்.

## தமிழ் கற்பின் தவச்சிறப்பு

செவிலித்தாய் மூலமாக அடிகள் தமிழ் குடும்பத்தின் கற்பு வாழ்க்கையை அழகுறப் படம்பிடித்து காட்டுகின்றார். கற்பு மேம்பட்ட காதலரைக் கடிமனையில் கண்டு வந்த செவிலியானவள் நற்றாயிடம் அவர்களைச் சிறப்புப்படுத்திப் பேசுகிறாள். அதாவது,

"தெய்வம் பணிகழலோன் தில்லைச் சிற்றம்பலம் அனையாள்
தெய்வம் பணிந்தறியாள் என்று நின்று திறை வழங்காத்
தெய்வம் பணியச் சென்றாலும் மன்வந்தன்றிச் சேர்ந்தறியான்
பல்வம் பணிமணியன்னார் பரிசின்ன பான்மைகளே" (திருக்கோவையார்:304)

என்கிறார். இப்பாடலில் பிற தெய்வங்கள் தன்னைவந்து பணியச் சீரோங்கும் தில்லைச் சிற்றம்பலவன் போன்றவள் தலைவி. அவள் தன் கணவனைத்தவிர பிற தெய்வங்களினை பணிந்தறியமாட்டாள். அதாவது தலைவியின் கற்பு நலத்தால் அவளை பிற தெய்வங்கள் வந்து வணங்குகின்றன. ஆனால் அவள் தன் தலைவனை மட்டுமே வணங்கக் கூடியவள் என புலப்படுத்தப்படுகின்றது. மேலும் "திறை வழங்காத் தெய்வம் பணியச் சென்றாலும் மன்வந்தன்றிச் சேர்ந்தறியான்". அதாவது திறைகொடப் பகைவர் வணங்கும் எண்ணம் வெற்றி பெற வினைவயிற் சென்றாலும் வெற்றிப் பெருக்கால் தம் கடமையை மறவாது விரைவில் மீண்டு மனைக் கிழத்தியை காண வருவான். செவிலி நற்றாயிடம் கூறும் இத்தொடர் நற்றாயின் மனத்திற்கு மகிழ்வு தரும் செய்தியாக அமைகிறது. அத்துடன் செவிலியும் பிறர்மனை சேர்ந்தறியான் எனக் கூறுகின்றாள்.

## தலைவியுடனான பிரிவுணர்த்தல்

இங்கு இறைவன் மீது கொண்ட காதலினை வெளிப்படுத்துவதனை நோக்குமிடத்து, கிடைப்பதற்கு அரியதான ஒரு பொருள் கிடைத்துவிட்டால் அதன் மீதான அன்பு அதிகரிக்குமே அன்றி அதனை இகழ்வதென்பது ஒருபோதும் நிகழாது அதுபோலவே கிடைப்பதற்கு அரிதான சிவகுருவானவர் எனக்கு கிடைத்து விட்டால் நான் ஒருபோதும் அவரை பிரிந்து இகழமாட்டேன் என்கின்றார். அத்துடன் சிவனை இவர் சிந்தாமணிக்கு ஒப்பிட்டுக் கூறுகின்றார். சிந்தாமணி என்பது நினைத்தவை அனைத்தையும் கொடுக்கின்ற ஒரு தெய்வ மாணிக்கமாகும். "மடமான் விழி மயிலே…" என்று சிவகுருவாகிய தலைவியை விளித்துக் கூறுகின்றார். தம் மருண்ட தன்மையால் தம்மையே நோக்கச்செய்து மன ஒருமைப்பாட்டை விளைவிக்கும் கண்களையும், மயக்கம்போக்கி தெளிவு தருகின்ற

மயிலையும் ஒப்பிட்டு இந்த இரு இயல்பும் சிவகுருவினிடத்து உள்ளது என்கிறார். அத்துடன் சிவனானவர் தனது இதயத் தாமரையில் என்றும் அன்னத்தின் வடிவில் வீற்றிருக்கின்றார். இவ்வாறு அன்னம்போல் இதயமாகிய தாமரையில் இருக்கின்ற தேவரைப் பிரிந்து ஒருகணமும் என்னால் இருக்க முடியாது என்று தன் மன உணர்வினை விளக்குகின்றார்.

எல்லா வகையான தீட்சைகளையும் பெற்று குருநாதனைக் கூடுவதற்கு முன்னும் பின்னும் ஒத்த அன்பினதாகிய உயிரை, இதுவரையும் இடைநின்று கூட்டுவித்த திருவருளே, இருவரது கூட்டமும் இடையூறின்றி நெடுங்காலம் சேர்வதற்காக பிரியாமல் இருக்கும். அது பிரிந்து விடுமோ என்று ஆன்மா சிவத்திடம் கொண்ட இணையில்லாதப் பேரன்பால் தான் பிரிந்து விடுமோ என்று அச்ச உணர்வுடன் எண்ணுவதனை கீழ்வரும் பாடலூடாக எடுத்துரைக்கின்றார்.

“சிந்தா மணிதெண் கடலமிர் தந்தில்லை யானருளால்
வுந்தா லிகழப் படுமே மடமான் விழிமயிலே
அந்தா மரையன்ன மேநின்னை யானகன் றாற்றுவணே
சிந்தா குலுமுற்றென் ணேவென்னை வாட்டந் திருத்துவதே”
(திருக்கோவையார்:11)

அதாவது சிந்தாமணியும் தெளிந்த பாற்கடலில் நின்று எழுந்த அமுதமும் உழைப்பின்றித் தில்லையான் அருளால் தாமே கிடைக்கப்பெற்றால் அவை பெற்றவனால் அவமதிக்கப்படுமோ? இளைய மான் கண்போன்ற கண்ணினையும், மயில்போன்ற சாயலையும் உடையவளே! அழகிய தாமரையில் வாழும் அன்னமே! உன்னை நான் பிரிந்து இவ்வுலகில் உயிருடன் வாழ்வேனோ? சிந்தை கலங்கி ஏன் என்னை வாட்டுகின்றாய்? என்று வினாக்களை வினவுவதன் மூலம் ஆசிரியரது தெய்வீகக் காதல் உணர்வின் மகத்துவத்தினை அறிய முடிகின்றது.

## தலைவியின் அருமை அறிதல்

சிவனாகியத் தலைவி வாழ்கின்ற பரமானந்தப் பெருவழியாகிய சூழலையும், உடன் ஆடுகின்ற மெய்ஞ்ஞானிகளின் கூட்டத்தையும் கண்டு இத்தனைப் பெரிய பிராட்டியோ எம்மால் அடையப் பெற்றவள்! இவளை நான் அடைந்தேன் என்பது மாயமோ? கனவோ? என வியந்து உரைப்பதனூடாக இவரது காதல் உணர்வு புலப்படுகின்றது.

புணர்ப்போன் நிலனும் விசும்பும் பொருப்புந்தன் பூங்கழலின்
துணர்ப்போ தெனக்கணி யாக்குந் தொல்லோன்றில்லைச் சூழ்பொழில்வாய்
இணர்ப்போ தணிகுழ லேழைதன் நீர்மையிந் நீர்மையென்றால்
புணர்ப்போ கனவோ பிறிதோ அறியேன் புகுந்ததுவே” (திருக்கோவையார்:17)

நிலன் என்னும் மண்ணையும் அதனைப் போகத்தனமாக்கி வினைகளை நுகரும் மக்கள் முதலான உயிர்களையும் பருப்பொருட்டான மண்ணை தனது வியாபகத்தினுள் அடக்கி நிற்கும் நுண்பொருட்டாகிய விண்ணையும், இடைப்பட்ட வளர்வு தேய்வும் மாற்றமும்

தோற்றமும் உடைய மலையையும் ஏனைய பூத பௌதிகங்களையும் படைக்கின்ற பரம் என்று சிவனை போற்றுகின்றார். இத்தகைய பர சிவத்தலைவியானவள் என் இழி நிலைக்கு கிடைத்திருக்கமாட்டாள் என்பது துணிவு. எனவே சிவபோக நுகர்ச்சி உயிரனுபவமாக உணர்வாக ஒட்டி நிற்கின்றது. ஆகவே இது கனவாக இருக்கலாம், எனினும் கனவாகப் பொய்த்தோற்றமாக இருக்கவும் இயலாது இதனை நான் உணர்கின்றேன். ஆகவே இவையிரண்டும் அல்லாத ஏதோ சொல்ல இயலாத ஒன்றாகவே இருக்குமோ என்று ஆசிரியர் வியந்த வண்ணம் தான் இறைவனிடம் கொண்டிருக்கும் அன்பினை மேல்வரும் பாடலினூடாக புலுப்படுத்துகின்றார்.

## தலைவியின் பாங்கியை அறிதல்

இறைவனது அருமையை அறிந்து நிற்கும் ஆன்மத் தலைவன், மெய்ஞ்ஞானியர் கூட்டத்தில் புகுந்த சிவத்தலைவியின் கண்களில் கருணை நிறைந்திருப்பதனைக் கண்டு, இவளுக்குத் தோழியாக இருப்பது இவளை விட்டு என்றும் நீங்காத திருவருள் ஆகும். எனவே அம்பலவாணப் பெருமானுக்கு அருள் சிறந்ததனைப்போல சிவத்தலைவியாகிய இவளுக்கு பாங்கி சிறந்தவளாக இருக்கின்றாள் எனத் தலைவன் சிவத்தினைப் புணரும் வாயிலாகத் திருவருளது சிறப்பினை அறிந்து கொண்டார். அதனை பின்வரும் பாடல் சுட்டுகின்றது.

“உயிரொன் றுளமுமொன் றொன்றே சிறப்பிவட் கென்னோடென்னைப்
பயில்கின்ற சென்று செவியுற நீள்படைக் கண்கள்விண்வாய்ச்
செயிரொன்று முப்புரஞ் செற்றவன் தில்லைச் சிற்றம்பலத்துப்
பயில்கின்ற கூத்த னருளென லாகும் பணிமொழிக்கே”(திருக்கோவையார்:18)

அதாவது திருவருளானது சிவத்தலைவியோடு பழமும் சுவையும் போன்று ஒன்றியிருப்பதாகும். பழத்தினையும் சுவையினையும் வேறு வேறாகப் பிரித்து உணர முடியாது. பூவின் வண்ணம் மற்றும் மணம் பூவோடு கலந்திருப்பது போன்று சிவத்தலைவியின் தோழியாகிய திருவருளானது என்னுடனும் ஒன்றாகிவிட்டது. மேலும் சிவன் முப்புரங்களையும் அளித்து திரிபுராரிகளுக்கு வாயிற்காவல் நல்கி நித்திய சேவை புரிந்தது போன்று சிவனது அருளானது ஆன்மாக்களின் மும்மல காரியங்களை அழித்துத் சிவபோகத்தினை அருளும் தன்மையுடையது என்பதனை ஆன்மத்தலைவன் தெளிவாக அறிந்து கொண்டமை புலப்படுகின்றது. இங்குத் தலைவனானவன் தலைவியினது தோழியினை அறிந்து கொண்ட விதத்தினை எம்மால் அவதானிக்க முடிகின்றது.

## மருங்கணைதல்

உயிரானது சிவத்தோடு கலந்து இன்பங்கொண்டு, அவ்வின்பத்தின் இயல்பினைப் பற்றி எடுத்துரைக்கையில் பின்வருமாறு இன்ப நிலைக்களங்களாகின்ற மருங்குதலையும் முலையையும் முன்னிலைப்படுத்தி பின்வரும் பாடலினூடாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

"தொத்தீன் மலர்பபொழிற் றில்லைத்தொல் லோனரு ளென்னமுன்னி
முத்தீன் குவளைமென் காந்தளின் மூடித்தன் ஏரளப்பாள்
ஒத்தீர்ங் கொடியி னொதுங்குகின் றாள்மருங் குல்நெருங்கப்
பித்தீர் பணைமுலை காளென்னுக் கின்னும் பெருக்கின்றதே"(திருக்கோவையார்:121)

அதாவது கொத்துக்களைப்பெறும் மலர்ப்பொழிலையுடைய தில்லையில் எழுந்தருளியுள்ள இறைவனது அருள் போல வந்து எதிர்பட்டு கண்ணீர் முத்துக்களைச் சொரியும் கண்களாகிய குவளைகளை காந்தள் மலர் போன்ற கைகளினாலே மூடி, தனது அழகினை அளந்து பார்ப்பது போல தேனான் ஈரிய கொடியின்கண் நாணத்தினால் ஒதுங்கி மறைகின்றவளது இடை வருந்த, பித்துக்கொண்டு பனைக்கின்ற முலைகளே! மேன்மேலும் பெருக்கின்றமை நன்று அன்று. இன்ப நுகர்வுக்கு உறுதுணையான ஞானங்களைப் பழிப்பான் போல இடையை அணைத்துப் போகத்தில் அழுந்தியமை பற்றி கூறுவதுடன் அம்பலவாணப் பெருமான் மெய்யடியார்களுக்கு வலியவந்து முன்னிற்பது போலத் தனக்கு எதிர்பட்டது சிவம் தான் என்று உயிரானது வியந்தமை பற்றி ஆசிரியர் விளக்குகின்றார்.

**வருத்தங்கூறி வரைவுகடாதல்**

இத்தனை நாள் கலந்தும் இவ்வுயிரானது நம் வரைவின்கண் நின்றதில்லையே எனச் சிவம் வருந்தும், திருமணம் செய்யாதவிடத்து சிவத்தலைவியானவள் வருந்துவாள், சிவத்தின் கருணையானது உயிருக்கு விரைவாக கிடைத்து விட்டது எனச் சிவத்தலைவியின் கருணையை எடுத்துரைத்து திருமணம் செய்யுமாறு திருவருளானது தலைவனுக்கு கூறுவதனைப் பின்வரும் பாடல் உணர்த்துகின்றது.

"மன்னுந் திருவருந் தும்வரை யாவிடின் நீர்வரைவென்
றுன்னு மதற்குத் தளர்ந்தொளி வாடுதிர் உம்பரெலாம்
புன்னும் புகழ்ப்பர மன்பரஞ் சோதிசிற் றம்பலத்தான்
பொன்னங் கழல்வழுத் தார்புல னென்னப் புலம்புவனே" (திருக்கோவையார்:131)

**கூடலிழைத்தல்**

தலைவனைப் பிரிந்த தலைவி, தலைவனின் வருகையினை எதிர்நோக்கிக் காத்துக் கொண்டிருக்கின்றாள். தன் தலைவனைக் காணும் காலத்தினை அறிய நிமித்திக்குறிகளின் மூலம் கணிப்பாள் தலைவி. இம்மரபுச் செயலைச் சங்க இலக்கியம் முதலே பல இலக்கியங்களும் கூடலிழைத்தல், கூடல், ஆழி என்னும் சொற்களால் சுட்டுகின்றன.

அந்தவகையில் "கூடலாவது வட்டமாகக் கோட்டைக்கீறி, அதற்குள்ளே சுழிசுழியாகச் சுற்றுஞ் சுழித்து, இரண்டு சுழியாகக் கூட்டினால் இரட்டைப்பட்டால் கூடுகை என்றும், ஒற்றைப்பட்டால் கூடாமை என்றும் சந்தேகமாகக் கூறுவர் என்று பெரியவாச்சான் பிள்ளை கூறுவார்" என மா.சா. அறிவுடை நம்பி கூடலிடைத்தல் பற்றி எடுத்தியம்புகின்றார். இத்தகைய

கூடலிடைத்தலினைத் திருக்கோவையாருள் அகப்பொருள் துறைகளுள் ஒன்றாகக் கையாளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

"ஆழி திருத்தும் புலியூர் உடையான் அருளின் அளித்து
ஆழித்திருத்தும் மணற்குன்றின் நீத்தகன்றார் வருகவென்று
ஆழித்திருத்திச் சுழிக்கணக்கு ஓதினமையால் ஐய
ஆழித்திருத்தி தரக்கிற்றி யோஉள்ளம் வள்ளையே" (திருக்கோவையார்:186)

என்னும் திருக்கோவையார் பாடலில், ஆழி என்ற சொல்லைக் கூடலிழைத்தல் என்ற பொருளில் கையாண்டுள்ளார். பெரிய வட்டமாக ஒரு கோடு போட்டு, அந்தக் கோட்டிலே சிறு சுழிகளைச் சுழித்து வந்து முடியும்போது இரட்டைப்படையில் வருகின்றதா? என்று தலைவியானவள் பார்க்கின்றாள். அவ்வாறு வருமாயின் தலைவன் விரைவில் வந்து விடுவான் என்றும் ஒற்றைப்படையில் வருமாயின் தலைவன் வரமாட்டான் என்றும் கணிக்கும் தலைவியின் நிலை எடுத்துக் கூறப்பட்டுள்ளமையிகை் காணமுடிகின்றது.

**குறியிடம் கூறல்**

உயிருக்குத் திருவருளானது, இரவில் நீ சிவமாகியத் தலைவியைச் சேர வேண்டும் எனில் பனைபோன்ற நீண்ட கையையுடைய யானையின் தோலைப் போர்த்த அம்பலத்தானது திருவடிகளை விண்ணோர் தொழுகின்ற இடமாகிய சாரல் மிகுந்த பொதியின் மலையிலே பொழியும் திருநீற்றினை அணிந்து, சுனையிலே வளரும் நீல மலர்களைச் சூடி, நாங்கள் விளையாடும் மயில்கள் துயில் கொள்ளும் கிளைகளைக் கொண்ட வேங்கை மரத்தினது நிழலில் வரவேண்டும் எனக் கூறுவதனை பின்வரும் பாடல் எடுத்துரைக்கின்றது.

"பனைவளர் கைம்மாப் படாத்தம் பலத்தரன் பாதம் விண்ணோர்
புனைவளர் சாரற் பொதியின் மலைப்பொலி சந்தணிந்து
சுனைவளர் காவிகள் குடிப்பைந் தோகை துயில்பயிலுஞ்
சினைவளர் வேங்கைகள் யாங்கள்நின் றாடுஞ் செழும்பொழிலே"(திருக்கோவையார்:154)

இந்நூலில் திருவருளானது, தலைவன் தலைவியருக்கிடையே நிகழ்கின்ற காதலிற்கு துணை செய்கின்ற தோழியாக அமைவதுடன் அவர்கள் இருவரையும் இணைத்து வைப்பதற்கான சேவையினை ஆற்றி வருகின்றது. இதனை,

"முன்னோர் மணிகண்டம் ஒத்தவன் அம்பலந் தம்முடிதாழ்த்
துன்னா தவர்வினை போற்பரந் தோங்கும் எனதுயிரே
அன்னாள் அரும்பெற லாவியன் னாயரு ளாசையினாற்
பொன்னார் மணிமகிழ்ப் பூவிழ யாம்விழை பொங்கிருளே" (திருக்கோவையார்:210)

என்னும் பாடல் விளக்குகின்றது. அதாவது சிவத்தலைவியை அழைத்துக்கொண்டு விரைவில் நான் வருவேன், அவ் வழியில் நீ தவறாது வந்து காத்திரு என்று திருவருள் உயிராகிய தலைவனுக்கு உணர்த்துகின்றது.

**வழி விளையாடல்**

வழியில் நடந்து வந்த களைப்பினால் தலைவியும் தலைவனும் (சிவமும் உயிரும்) ஓரிடத்திலிருந்து தமது அன்புரைகளால் தம்முள் அளவளாவியமை பற்றி பின்வரும் பாடலானது சுட்டிக்காட்டுகின்றது.

"கண்கடம் மாற்பயன் கொண்டனம் கண்டினிக் காரிகைநின்
பண்கட மென்மொழி யாரப் பருக வருகவின்னே
விண்கட நாயகன் றில்லையின் மெல்லியல் பங்கனெங்கோன்
தண்கடம் பைத்தடம் போற்கடுங் கானகம் தண்ணெனவே"

(திருக்கோவையார்:220)

"மீண்டாரென உவந்தேன் கண்டும்மை இம்மேதகவே
பூண்டார் இருவர்முன் போயினரே புலியூரெனை நின்று
ஆண்டான் அருவரை ஆளியன்னானைக் கண்டேனயலே
தூண்டா விளக்கனையாய் என்னயோ அன்னை சொல்லியதே"

(திருக்கோவையார்:244)

என்று தலைவி பாடுவதாக அமையும் பொங்கும் உணர்வு வேகத்தில் காதலின் வெளிப்பாட்டினை கண்டு கொள்ள முடிகின்றது.

**நெல் தூவிப் பார்த்தல்**

தலைமக்களின் களவு வாழ்க்கை, கற்பு வாழ்க்கையாக மாறுவதற்கான பயணத்தில் ஒரு மைல் கல்லாக விளங்குவது அறத்தொரு நிற்றல் என்னும் துறையாகும். இம்முறையில் தோழி கூற்றாகவும் செவிலி கூற்றாகவும் கூற்றுகள் நிகழும். வேலனைக் கொண்டு வெறியாடச் செய்து கழங்கு பார்த்தலும், கட்டுவிச்சியை அழைத்துக் குறி கேட்டலுமாகிய இரு செயல்களும் இத்துறையில் நடக்கும்.

"குயிலிதன் றேயென்ன லாஞ்சொல்லி கூறன்சிற் றம்பலத்தான்
இயலிதன் றேயென்ன லாகா இறைவிறற் சேய்கடவும்
மயிலிதன் றேகொடி வாரணங் காண்கவன் சூர்தடிந்த
அயிலிதன் றேயிதன் றேநெல்லிற் றோன்றும் அவன்வடிவே" (திருக்கோவையார்:285)

என்னும் பாடலில் தலைவியின் நிலையினை அறிய செவிலி கட்டுவிச்சியை அழைத்துக் குறிபார்க்கும் செயலை எடுத்துரைக்கின்றார்.

**பிறை தொழுதல்**

அக்காலத்து மக்களின் வணக்கத்திற்குரிய செயல்களில் பிறை தொழுதலும் ஒன்றாகும். கோவை நூல்களில் பிறை தொழுதல் என்னும் நிகழ்ச்சி கூறப்படும். திருக்கோவையாரில், தலைவியின் புணர்ச்சி நிலையினை அறிய எண்ணிய தோழி வானத்தில் தோன்றும் பிறைமதியைக் காட்டி இதனைத் தொழுவாயாக எனக் கூறுகின்றாள்.

வரைபொருளுக்காகத் தலைவன் பிரிந்து செல்கின்றான். பிரிந்து மீண்டும் திரும்பி வரும்பொழுது வரைவிற்கான முயற்சிகள் நடக்கும். தலைவியைத் திருமணத்திற்காக பெண் கேட்க மணமுரசு ஒலிக்கச் செய்து செல்வர். திருமணத்திற்காக பேசும் போது தலைவனுடைய சுற்றத்தாரும், அறத்தில் சிறந்த சான்றோரும் கூடியிருந்து பெண்ணின் பெற்றோரிடம் பேசுவர். தலைவியின் சுற்றத்தாரும் தம் இல்லத்தினை அழகுபடுத்துவார்கள். பூக்களால் தோரணம் கட்டித் தொங்கவிட்டு அழகுபடுத்துவார்கள். பொற்குடங்களும் ஐந்தலை விளக்குகளும் பிறவற்றையும் ஒருங்கே அமைத்து எதிர் முரசொலித்துத் தலைவனின் சுற்றத்தாரை வரவேற்பாள். இதனை மாணிக்கவாசகர் பின்வருமாறு கூறுகின்றார்.

“பூரண பொற்குடம் வைக்க மணிமுத்தம் பொன் பொதிந்த
தோரண நீடுக – தூரியம் ஆர்க்கதொன் மாலயற்குங் காரணன்
ஏரணி கண்ணுத லோன்கடல் தில்லையன்ன வாரணவும்
முலை மன்றலென் றேங்கு மணமுரசே” (திருக்கோவையார்:296)

என்று திருக்கோவையாரின் பாடலில் மணமுரசு கேட்டு மகிழ்ந்துரைத்தல் என்னும் பகுதியில் திருமணத்திற்கு பெண் கேட்கச் செல்லும்போது வந்தவர்கள் விரும்புமாறு வரவேற்று அவரவர்க்கு வேண்டும் இருக்கையும், சிற்றூண்டியும் கொடுத்து மகிழ்வர் என்னும் இந்துக்களது விருந்தோம்பல் வழக்கத்தினையும் அறிந்து கொள்ள முடிகின்றது.

### காதல் கட்டுரைத்தல்

தலைவியானவள் தலைவன் மீது தீராக் காதலை உடையவள் என்பதனை மாணிக்கவாசகர் பல பாடல்களில் எடுத்துரைக்கின்றார். இருப்பினும் தலைவன் - தலைவி கற்பு வாழ்வில் மேம்பட்டு விளங்குவதனைக் கண்டு வந்த செவிலி பேசுவதாக அமையும் காதல் கட்டுரைத்தல் என்ற பகுதியில் தெளிவாக புலப்படுத்துகின்றமை சிறப்பாகும்.

“பொட்டாணியான் நுதல், போயிறும் போல் இடையெனப்பூண்
இட்டணி யான் தவிசின் மலரன்றி மிதிப்பக் கொடான்
மட்டணி வார் குழல் வையான் மலர் வண்டு உறுதல் அஞ்சிக்
கட்டணி வார் சடையோன் தில்லை போலி தன் காதலனே” (திருக்கோவையார்:303)

என்னும் பாடலில் தலைவியினிடத்துக் காதல் கொண்ட தலைவன் அவள் இடையானது முறியுமென்று எண்ணி அணிகலண்களை அணியத் தயங்குகின்றான். மெல்லிடை நோகும் என்று பனிமலரைத் தவிர வேறு எதனையும் படுக்கையில் விரிக்கமாட்டான். வண்டுகள் வந்து மொய்க்குமென்று எண்ணி அஞ்சிக்கூந்தலில் மலரினை அணிய விரும்ப மாட்டான் என்று செவிலியானவள் தலைவனின் அன்பினை எடுத்துக்கூற, முத்தாய்ப்பாக நெற்றியில் பொட்டணிந்தால் தாங்கமாட்டாள் என்று தலைவன் எண்ணுவதனைத் திருக்கோவையாரில் அவதானிக்க முடிகின்றது. இப்பாடலில் தலைவனது காதலுடன் சேர்த்து தலைவியின் உடல் நலத்தினில் தலைவன் கொண்டுள்ள அக்கறையும் மிகத்தெளிவாகப் புலப்படுத்தப்படுகின்றது.

தலைவனின் காதல் நோயை அறிந்த பாங்கன் தலைவனைப் பலவாறு பிரிந்து செல்வதற்கு முயற்சி செய்கின்றான். இருப்பினும் தலைவன் மேல் கொண்ட அன்பின் மிகுதியால் அவனுக்கு உடன்படாமலும் இருக்க முடியவில்லை. பாங்கனின் தயக்கத்தினைக் கண்ட தலைவன் தனது விதியினைத் தானே நொந்து கொள்கினறான். பாங்கனோ தலைவனின் தாழ்விற்கு தானே காரணமாகிய தன் விதியை எண்ணி மனம் வருந்துகின்றான். இந்தச் செயலினை திருக்கோவையார் பின்வரும் பாடலின் ஊடாக தெளிவுபடுத்துகின்றது.

"ஆலத்தினால் அமிர்தாக்கிய கோன் தில்லை லயம்பலம்போல்
கோலத்தினான் பொருட்டாக, அமிர்தங் குணங் கெடினுங்
குாலத்தினால் மழை மாறினும் மாறாக் கவிகை நின்பொற்
சீலத்தை நீயும் நினையாது ஒழிவது ன் தீவினையே" (திருக்கோவையார்:27)

என்னும் பாடலில் அமுதம் சுவை மாறினும், மழை பெய்யாது பொய்ப்பினும் தலைவனானவன் மாறாத தன்மையினை உடையவன். இத்தகைய சிறப்புடைய தலைவன் பெண்மையின் மீது ஆசைகொள்ளுமாறு ஆகிவிட்டதே என்றும், அதற்குத் தானே காரணம் என்றும் வருந்தகின்றான். நல்வழிப்படுத்த வேண்டிய தோழன் பெண்ணின் காரணமாக நலியறும் நிலையில் இருக்க அதனைத் தடுத்துக் காக்காது வாழ்ந்து விட்டோமே என நொந்து கொள்ளும் திறன் மேற்காட்டப்பட்ட பாடலினூடாக புலப்படுத்தப்படுகின்றது.

**இளவேனில் கண்டு இன்னலெய்தல்**

அழகிய தொண்டைக்கனி போன்ற இதழினையும் யாழினோசை போலும் இனிய மொழியினையும் உடைய உமையொரு பாகனது சிற்றம்பலத்தினை விரும்பாது சிவனைச் சிந்திக்காது, உணவால் தருக்கிய மக்களது மனம் அறியாமையில் மிகுவதுபோலக் குயில்களும் இளமைச் செருக்காலும் உணவுப்பெருக்காலும் கரிய நிறத்தினை அடைந்தன. இம்மாம்பொழிலிலே வண்டுகள் மொய்க்கும் இடமெங்கும் வந்து சூழ்ந்து கொண்டன இனி உயிர் வாழும் வகை அறியேன் என்று உரைக்கின்றார்.

"வாழும் படியொன்றுங் கண்டிலம் வாழியிம் மாம்பொழிற்றேனன்
சூழும் முகச்சுற்றும் பற்றின வாற்றொண்டை யங்கனிவாய்
யாழின் மொழிமங்கை பங்கன்சிற் றம்பல மாதரியாக்
கூழின் மலிமனம் போன்றிரு ளாநின்ற கோகிலமே" (திருக்கோவையார்:322)

இந்தப் பாடலினூடாக ஆசிரியர் முன்வைக்கின்ற விடயமாவது, சிவசிந்தனையானது எம்மிடம் காணப்படும் அறியாமையை அகற்றும் அருமருந்து ஆகும். கருங்குயில் சூழ்ந்தன என்பதனூடாக கூறமுற்படுவது அறியாமையானது உயிரினை வந்து பற்றிக்கொண்டால் உயிரானது எவ்வகையில் இன்பத்தினை அடையும் ? எமது உயிரினை ஆட்கொண்டு அதனை எவ்வகையில் இறைவனானவன் உய்யச்செய்வது? என்று உயிராகிய தலைவன் தன்னுடன் இருக்கையில் ஏற்படுகின்ற இன்பத்தினை இன்புருவாகிய சிவத்தலைவி இளவேனில் காலத்தினில் அடைகின்ற துன்ப நிலைபற்றி எடுத்துரைக்கிப்படுகின்றது.

**நிலமை நினைந்து கூறல்**

வினைமுற்றிய பின்னர், சிவத்தோற்றத்தைக் கண்டு சிவனைச் சென்றடைய வேண்டுமென்று விரைவோடு உயிராகியத் தலைவன், சிவத்தலைவியின் நிலைமையை நினைத்து தேரினை விரைந்து தலைவியை நோக்கி செலுத்துமாறு பாகனுக்கு கூறுகின்றார். இதனை பின்வரும் பாடல் சுட்டுகின்றது.

“சிறப்பிற் றிகழ்சிவன் சிற்றம் பலஞ்செய்து சேர்ந்தவர்தம்
பிறப்பிற் றுனைந்து பெருகுக தேர்பிறங் கும்மொளியார்
நிறப்பொற் புரிசை மறுகினிற் றுன்னி மடநடைப்புள்
இறப்பிற் றுயின்றுமுற் றத்திரை தேரும் எழினகர்க்கே” (திருக்கோவையார்:328)

மாடப்புறாக்கள் தமது துணையுடன் துயின்று முற்றத்தினில் இரையினை பகிர்ந்து உண்டு விளையாடுவதனைக் கண்ட சிவமாகிய தலைவியானவள் தலைவனைப் பிரிந்தது எண்ணி மிகவும் துன்பப்படுவாள். எனவே சிவத்தலைவிக்கு அத்துன்பமானது ஏற்படாது அவளிடம் விரைந்து சென்று கருணை செய்ய வேண்டும். ஆகவே தலைவியின் இருப்பிடத்திற்கு விரைந்து செல்லுமாறு தேரினை செலுத்துபவனுக்கு தலைவனானவன் அறிவுறுத்துகின்றான். இங்ஙனம் கூறுவதனூடாக சிவன் மீது தமக்குள்ள தெய்வீகக் காதலினை ஆசிரியர் தெள்ளத்தெளிவாக எடுத்துரைக்கின்றார்.

**முகிலோடு கூறல்**

பாகனிடம் விரைந்து செல்லுமாறு ஆணையிட்ட உயிர்த்தலைவன், வானத்தில் மேகத்தினது ஓட்டத்தினைக் கண்டு, இந்த மேகமானது நான் சிவத்தலைவியின் இருப்பிடத்தை அடையும் முன்னர் அவளது நகரினைச் சென்றடையாது ஒழிந்துவிட வேண்டும். அவ்வாறு இது சென்றடைந்தாலும் அவள் ஏதேனும் வினவினால் பதில் ஏதும் கூறாது ஒழிந்து விடு ஏனெனில் நான் உனக்கும் முன்பாக தலைவியைச் சென்றடைந்து இன்பமளிக்க எண்ணுகின்றேன் என்று மேகத்தினை நோக்கி வேண்டுகின்றார். இதனை,

“அருந்தே ரழிந்தனம் ஆலமென் றோல மிடுமிமையோர்
மருந்தே ரணியம் பலத்தோன் மலர்த்தாள் வணங்கலர்போல்
திருந்தே ரழிந்து பழங்கன் தருஞ்செல்வி சீர்நகர்க்கென்
வருந்தே ரிதன்முன் வழங்கேல் முழங்கேல் வளமுகிலே” (திருக்கோவையார்:329)

என்னும் பாடலின் ஊடாக விளக்குகின்றார். இவ்வாறு தலைவன் முகிலை வேண்டிக் கொள்வதனூடாக சிவத்தலைவியின் மீது தலைவனுக்குள்ள காதல் உணர்வும், தலைவியைச் சார்ந்து தலைவனானவன் அவளை அன்பு செய்வது குறித்து அவனது மனதில் கொண்டிருக்கும் ஏக்கமும் மிகவும் அழகாக எடுத்துக்காட்டப்படுகின்றது.

**மறவாமை கூறல்**

உயிர்த்தலைவன் தலைவியுடன் ஒன்றியிருக்கையில், திருவருளானது தலைவனை நோக்கி தாம் தலைவியைப் பிரிந்து வாழ்ந்த தருணங்களில் அவளை மறந்ததுண்டோ? என்று வினவியது. அதனைக் கேட்ட தலைவன் என் நெஞ்சமாகியத் திரையில் உனது தலைவியைக் கண்டுகொண்டே இருக்கின்ற எனக்கு மறதி என்பது எவ்வாறு உண்டாகும் என்று பதிலளிக்கின்றார். இதனைப் பின்வரும் பாடலினூடாக அறிய முடிகின்றது.

"கருங்கவ ளைக்கடி மாமலர் முத்தங் கலந்திலங்க
நெருங்கு வளைக்கிள்ளை நீங்கிற் றிலணின்று நான்முகனோ
டொருங்கு வளைக்கரத் தானுண ராதவன் றில்லையொப்பாய்
மருங்கு வளைத்துமன் பாசறை நீடிய வைகலுமே"(திருக்கோவையார்:331)

என் பரிபாக முதிர்வால் விளைந்த சிவபோதம் மாற்றமடைந்து சீவபோதமாக இருந்தால்தான் மறதி உண்டாகும். ஆனால் நான் எப்போதும் சிவபோதமாகத்தான் இருந்தேன். அதனால் தான் தனித்துப் பாசறையில் தங்கிய போதெல்லாம் கருணைக் கண்களோடு கூடிய தலைவி என் மனத்திரையில் தோன்றினாள். இதனால் நான் தலைவியை என்றும் பிரியாமலும் அவளை ஒருபோதும் மறவாமலும் இருந்தேன் என்று உயிராகியத் தலைவன் திருவருளிடம் தான் சிவமாகிய தலைவியிடம் கொண்டிருந்த உயரிய காதலினை திருவருளுக்கு கூறுகின்ற பதிலினூடாக வெளிப்படுத்துகின்றார்.

**ஆற்றாமை கூறல்**

தலைவனானவன் பொருள் தேடுகின்ற நோக்கில் தலைவியினை விட்டுப் பிரிந்த வேளையில் அவள் பிரிவு எனும் நோயால் மிகவும் பாதிக்கப்பட்டமை பற்றி திருவருளானது தலைவனுக்கு எடுத்துரைக்கின்றது. அதாவது அவளது மேனி பல மாற்றங்கள் பிரிவு நோயால் ஏற்பட்டன என்று இங்கு விளக்கப்படுகின்றது. இதனை பின்வரும் பாடலினூடாக அறிய முடிகின்றது.

"வானக்கடிமதிற் றில்லையெங் கூத்தனை யேத்தலர் போல்
குானக் கடஞ்செல்வர் காதல ரென்னக் கதிர்முலைகள்
முானக் கனகந் தருமலர்க் கண்கண்முத் தம்வளர்க்கும்
தேனக்க தார்மன்னன் என்னோ இனிச்சென்று தேர்பொருளே" (திருக்கோவையார்:335)

அதாவது, தலைவியினது ஒளிபொருந்திய முலைகள் பெருமையோடு கூடிய பொன்னைத் தராது நின்றன. மலரினைப்போன்ற அவளது கண்கள் முத்தம் சொரிந்தன. எனவே தேனோடு மலர்ந்த மாலையினை அணிந்த மன்னனே! இனி நீ சென்று தேடும் பொருள் யாது? என்று திருவருள் தலைவனை நோக்கிக் கூறுகின்றது. அந்தவகையில் சிவத்தலைவியின் திருமேனியில் பிரிவினால் விளையும் உணர்ச்சியை உயிருக்கு விளக்குகின்றது. இப்பாடலிலிருந்து காதலன் காதலியினை பிரிவதனால் காதலியின் உடலில் ஏற்படுகின்ற மாற்றங்களினை ஆசிரியர் புலப்படுத்தி நிற்கின்றார்.

**இரவு துயரத்திற்கு இரங்கியுரைத்தல்**

தலைவன் தலைவியினை பிரிந்து சென்றதும் திருவருளானது தலைவியின் துன்பத்தினை எண்ணி வருத்தமுற்றது. அதாவது எல்லாம் உறங்கிய நடு இருள் யாமத்தில் தலைவியின் மீது காதல் கொண்ட தலைவனானவன் அவளை தனியே விட்டு பிரிந்து சென்றுவிட்டான். பிரிவினால் விளையும் நோய் சிவத்தலைவியினை பெரிதும் வருத்தப்போகின்றது. பொழுது விடிந்ததும் தான் தலைவனானவன் தலைவியிடம் வருவான். ஆகவே சூரியன் தனது தேரினைக்கொண்டு எப்போது வருவானோ? என்று எண்ணி சிவத்தலைவியின் மீது அன்பு கொண்ட திருவருளாகிய தோழியானது வருத்தமுற்றது. இதனை பின்வரும் பாடலானது சுட்டி நிற்கின்றது.

''ஈழியொன் றீரடி யும்மிலன் பாகன்முக் கட்டில்லையோன்
ஊழியொன் றாதன நான்குமைம் பூதமும் ஆறொடுங்கும்
ஏழியன் றாழ்கட லும்மெண் டிசையும் திரிந்திளைத்து
வாழியன் றோவருக் கண்பெருந் தேர்வந்து வைகுவதே'' (திருக்கோவையார்:339)

**இகழ்ச்சி நினைந்தழிதல்**

பிரிவின் துயரத்தினால் வருந்துகின்ற தலைவியினை வருந்தாமல் செய்வதற்காக தோழியானவள் ஆறுதல் கூறுவதனூடாக தலைவனது காதல் பற்றியும் அவனது சிறப்பான குணநலம் பற்றியும் விளக்குகின்றாள். அந்த வகையில் தலைவனது நாட்டு மக்களின் சிறப்பும் இங்கு விளக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இதனை,

''கானமர் குன்றர் செவியுற வாங்கு கணைதுணையாம்
மானமர் நோக்கியர் நோக்கென மானற் றொடைமடக்கும்
வானமர் வெற்பர்வண் டில்லையின் மன்னை வணங்கலர்போல்
தேனமர் சொல்லிசெல் லார்செல்லல் செல்லல் திருநுதலே'' (திருக்கோவையார்:274)

நம் தலைவனது வெற்பின்கண் வாழ்பவர்கள் கருணைப் பண்பினை மிகையாகக் கொண்டவர்கள். அதாவது காட்டிலே வேட்டையாடச் செல்லும்போது மான்களை நோக்கி தமது கணையினைத் தொடுக்க குறி வைப்பர். அவ்வாறு குறித்த இலக்கினை நோக்கி குறி வைத்து தம் காது வரை இழுத்த கணையை தமது வாழ்க்கைத் துணைவியரது கண்களை போன்று அந்த மான்களது கண்களும் இருப்பதனைக் கண்டு தாம் தொடுத்த கணையினை மடக்கிக் கொள்ளுகின்ற தூய மனம் படைத்தவர்கள். இத்தகைய மனதினையுடைய குறவர்கள் வாழுகின்ற மலை நாட்டினைச் சேர்ந்த நமது தலைவர் நாம் வருந்தும்படியாக நம்மைவிட்டு நீங்கிவிட மாட்டார். எனவே நீ துயரம் கொள்ளாமல் இரு என்று கருணைமிக்க திருவருளானது சிவத்தலைவிக்கு ஆறுதல் கூறுகின்றது. இதனூடாக தலைவன் நீங்கிய நேரத்தில் தலைவிக்குத் துணையாக தோழியானவள் காணப்படுவதனை எம்மால் அறிய முடிகின்றது.

## வாய்மை கூறி வருத்தந் தணித்தல்

உயிரானது என்றும் குறையாத மாறாத அன்பினை உடையது, ஆதலால் அவர் கூறியது அத்தனையும் பொய் ஆகாது அவர் கூறுவது பொய் என்று நீ கருத்தில் கொண்டாய் எனில் இவ்வுலகில் மெய் என்பது சிறிதும் இல்லை, என்று திருவருளானது சிவத்தலைவிக்கு உயிரின் உண்மையையும், சொல்மாறாது நடக்கும் தூய்மையையும் எடுத்துக்கூறி வருத்தத்தினை தணித்தது. இதனை,

"மொய்யென்ப தேயிழை கொண்டவன் என்னைத்தன் மொய்கழற்காட்
செய்யென்ப தேசெய்த வன்றில்லைச் சூழ்கடற் சேர்ப்பர்சொல்லும்
பொய்யென்ப தேகருத் தாயிற் புரிகுழற் பொற்றொடியாய்
மெய்யென்ப தேதுமற் றில்லைகொ லாமிவ் வியலிடத்தே"(திருக்கோவையார்:277)

எனும் பாடலினூடாக அறியமுடிகின்றது.

## பிரிவு கேட்டிரங்கல்

இன்ப வடிவாகிய சிவத்தலைவியானவள் உயிரின் அநாதியியல்பான பிற உயிர்களைப் பாதுகாப்பது பற்றி எடுத்துக்கூறி, அன்று யானையிடம் இருந்து என்னைப் பாதுகாத்த கருணையாளராகிய உயிரானது இன்று அவ்வுயிரினைத் தவிர வேறு உறுதுணை எனக்கு இல்லாத நிலையில் என்னை பிரிந்து செல்வது தகுமா? என்று கேட்கிறது. அதாவது முன்னர் யானையைக் கொன்று தனக்கு இன்பமூட்டிய பண்டைய நிகழ்வினைக் கூறி, அத்தகைய ஆன்மா இன்று பிறிதொரு துணையுமில்லாத என்னை தனித்துவிட்டு நீங்கிச் செல்வது தகாது என்று தனது பிரிவுத் துயரினை சிவத்தலைவியானவள் தலைவனுக்கு எடுத்துரைப்பதனை கீழ்வரும் பாடலினூடாக அறிந்துகொள்ள முடிகின்றது.

"சிறுகட் பெருங்கைத்திண் கோட்டுக் குழைசெவிச் செம்முகமாத்
தெறுகட் டழியமுன் உய்யச்செய் தோர்கருப் புச்சிலையோன்
உறுகட் டழலுடை யோனுறை யம்பலம் உன்னலரின்
துறுகட் புரிகுழ லாயிது வோவின்று சூழ்கின்றதே" (திருக்கோவையார்:313)

## குறிப்பறிந்து புலந்தமை கூறல்

தலைவனுடன் புலவி தீர்ந்து கூடிய தலைவி, பின்னுமொரு குறிப்பு வேறுபாடு கண்டு மீண்டும் ஊடல் கொள்வதுமாகிய தலைவியின் இயல்பினைத் தெளிவுபடுத்துவதாக அமைகின்றது. மாணிக்கவாசகர் இறைவன் மீது கொண்ட அன்பினையும், காதலையும் வெளிப்படுத்த நாயக நாயகி பாவம் சிறந்ததொரு உத்தியாகப் பயன்படுத்தியுள்ளார். இவ்வன்பு பாராட்டலே காதலாகிக் கசிந்து கண்ணீர் ததும்பி, பரவச நிலையில் இறைவனைக் கூடிக்களித்து உயிர் ஏங்கும் நிலையில் அகக் கவிதையாகப் படைத்துள்ள மாணிக்கவாசகரின் படைப்புத்திறன் போற்றுதற்குரியதாக அமைந்துள்ளது. இதனை பின்வரும் பாடல் புலப்படுத்துகின்றது.

“மலரைப் பொறாவடி மானும் தமியண்மன் னன்னொருவன் பலரைப்
பொறாதென் றிழிந்துநின் றாள்பள்ளி காமனெய்த அலரைப்
பொறாதன் றழல்விழித் தோனம் பலம்வணங்காக் கலரைப்
பொறாச்சிறி யாளென்னை கொல்லோ கருதியதே” (திருக்கோவையார்:367)

**கற்பனை ஊற்று**

திருக்கோவையாரின் முதற்பாடலே மாணிக்கவாசகரின் கற்பனை வளத்தினை பறைசாற்றுகின்றது. அதாவது ஒப்பாரும் மிக்காரும் இல்லாத தலைமகனும் தலைமகளும் பண்டைப் பிறப்பிற்பழகிய பயனாகத் எதிர்ப்பட்டு ஒருவரை ஒருவர் தன்மையிற் கண்ணுற்ற பொழுது, வேட்கை வயத்தனாகி தலைமகளைக் கண்டு வியந்து கூறுவதாக அமைந்தது அக்கற்பனைப் பாடல். தலைமகளைக் கண்டு வேட்கையுடையவனாய் நின்ற தலைமகன் அவளை ஒரு தெய்வப் பூமாலையாக உருவகங் கொண்டு காமனது வெற்றிக் கொடியோ என உவமித்து சொல்வதாக அப்பாடல் அமைந்திருக்கிறது. இவ்வாறு ஒரு பெண்ணைக் கண்ட தலைவன் அப்பெண்ணை ஒரு பூமாலையாக உவமித்துக் கூறிய பாங்கு பிற இலக்கியங்களில் காணமுடியவில்லை என்றே கூறலாம்.

**முடிவுரை**

திருக்கோவையார் எனும் அகப்பொருள் கோவையைப் படைத்த மணிவாசகர், இறைவன் மீது கொண்டிருந்த தெய்வீகக் காதலினை மிகவும் தெளிவாகக் காட்டியுள்ளார். அத்துடன் இந்நூலில் தலைவன், கிளைத்தலைவன், தலைவி, தோழி போன்ற பாத்திரப்படைப்புகளும் சிறப்பாக உள்வாங்கப்பட்டு இவ்விலக்கியமானது படைக்கப்பட்டுள்ளது. பாட்டுடைத் தலைவனாக சிற்றம்பலத்தில் உறைகின்ற சிவன் போற்றப்பட்டுள்ளான். தலைவன் மீது அளவற்ற பக்தி கொண்டவராக கிளைத்தலைவன் விளங்குகின்றான். அதற்குச் சான்றாக ஒவ்வொரு பாடலிலும் சிற்றம்பலத்தானின் புகழினைப் பற்றி பேசப்பட்டுள்ளது.

தன்னைக் காதலனாகவும் இறைவனைக் காதலியாகவும் கொண்டு தனது காதல் உணர்வுகளையும் மன எண்ணத்தினையும் அழகாக எடுத்துரைக்கும் வகையில் ஆசிரியரால் இந்நூலானது படைக்கப்பட்டுள்ளது.

காதலர்களது புணர்தல், காதலியின் ஏக்கம், தலைவியின் அழகு, தலைவியின் எதிர்பார்ப்பு, காதலனின் பிரிவுத்துயர், தோழியின் நம்பிக்கை, தலைவனது வீரம், நாட்டின் சிறப்பு போன்றனவற்றின் மூலமாக தெய்வீகக்காதல் உணர்வுகள் மிகையாக எடுத்தியம்பப்பட்டுள்ளமையை அறிந்துகொள்ள முடிகின்றது.

திருக்கோவையார் அகப்பொருள் இலக்கியக் கோட்பாடுகளை முற்றிலும் தந்து அகப்பொருள் இலக்கியங்களுக்கு முன்னோடியாகத் திகழ்கிறது. அத்துடன் களவு, கற்பு

ஒழுக்கங்கள் எவ்வாறு நிகழ வேண்டும் என்பதனை தெளிவாகக் காட்டுகின்றது. மேலும் திருக்கோவையார் திருமுறைகளில் ஒன்றாக அமைந்திருப்பதே திருமுறைகள் காட்டும் அகக்கோட்பாடு என்ற சிந்தனைக்கு வித்தாகின்றது. அகக்கோட்பாடானது சமய உணர்வால் பாதிக்கப்பெறுவதில்லை என்பதும் திருக்கோவையாரின் மூலம் அறிய முடிகின்றது. அகக்கோட்பாடுகளை சங்க இலக்கியங்கள் ஆங்காங்கு பகுதி பகுதியாக குறிப்பிடுவதை ஒருசேரத் தொகுத்து தருவதில் வெற்றி பெற்றது திருக்கோவையார் எனலாம்.

**உசாத்துணை**


இரகுபரன், க., பிரசாந்தன், ஸ்ரீ., (2015), திருவாதவூரரும் சைவத்திருநெறியும், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்,கொழும்பு.

செங்கல்வராயப்பிள்ளை, வ.சு., (1970), திருக்கோவையார் ஒளிநெறி, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

தண்டபாணி தேசிகர், ச., (2016), திருக்கோவையார் மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை.

மாணிக்கம், வ.சுப., (2009), தமிழ்க்காதல், மெய்யப்பன் பதிப்பகம், சென்னை.

மாதையன், பெ., (2009), அகத்திணைக் கோட்பாடும் சங்க அகக்கவிதை மரபும், பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை.

முத்தப்பன், பழ., (1986), திருமுறைகளில் அகக்கோட்பாடு, கலைவாணி கலர் அச்சகம், சென்னை.

வசந்தகுமார், இராச., (2016), திருக்கோவையார் - எட்டாம் திருமுறை (II), செஞ்சுடர் அச்சகம், கோவை.